செ. கு. எண்:046 நாள் :22.07.2015

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 22.7.2015

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம், மகாராஜபுரம் கிராமம், தாணிப்பாறை அடிவார மலைப் பகுதியில் 17.5.2015 அன்று பெய்த பலத்த மழையின் காரணமாக திடீரென ஏற்பட்ட காட்டாற்று வெள்ளத்தில் விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பைச் சேர்ந்த திரு. ராஜா என்பவரின் மகன் பொன்ராஜ், திரு. ஆனந்தராஜ் என்பவரின் மகன் பாஸ்கரன், தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையைச் சேர்ந்த திரு. அசோகன் என்பவரின் மகன் உதயா கணேசன், தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் வட்டம், புதியம்புதூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. சுப்பிரமணியன் என்பவரின் மகன் பட்டாளம் என்கிற அனந்தப்பன், ஸ்ரீவில்லிப்புத்தூரைச் சேர்ந்த திரு. குருசாமி என்பவரின் மகன் செல்லச்சாமி, ராமநாதபுரத்தைச் சேர்ந்த திரு. ஆனந்த் என்பவரின் மகன் சரவணக்குமார் மற்றும் தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் வட்டம், புதியம்புத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. குருசாமி என்பவரின் மகள் முப்பிடாதி ஆகியோர் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து துயரம் அடைந்தேன்.

காட்டாற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**